பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 09 2026 MONDAY 6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தன்னலமின்றி தேசத்திற்கு சேவையாற்ற அனைவரும் உறுதியேற்க வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. நாடு முழுவதும் இன்று முதல் 3 நாட்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்படுவதாக வங்கி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

3. அதிக கட்டணம் வசூலிக்கும் ஆம்னி மற்றும் தனியார் பேருந்துகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

4. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளாதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

5. வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள்

---------------

தன்னலமின்றி தேசத்திற்கு சேவையாற்ற அனைவரும் உறுதியேற்க வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

விஸ்வ ஹிந்து பரிஷத்தின் முன்னாள் தலைவர் அசோக் சிங்காலின் பிறந்த நூற்றாண்டு விழாவையொட்டி நாளிதழ்களுக்கு அவர் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில், மற்றவர்களின் நலனுக்காக அர்ப்பணிக்கப்படும் வாழ்க்கை உயர்ந்த மதிப்பைப் பெறுவதாகக் கூறியுள்ளார். இதையே நமது சான்றோர்களும் ஞானிகளும் நீண்ட காலமாக போதித்து வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தத்துவங்களின் அடிப்படையில் தமது வாழ்க்கையை தேசத்துக்காக அர்ப்பணித்தவர் அசோக் சிங்கால் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். அவரது மதிப்புகளையும் தேச சேவைக்கான அவரது அர்ப்பணிப்பையும் இளைஞர்கள் அறிந்து கொண்டு செயலாற்ற வேண்டும் என திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

----------------

வங்கி ஊழியர்களின் 3 நாள் வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் 5 நாள்களுக்கு வேலைத்திட்டத்தை அமல்படுத்துவது, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கம் இன்று முதல் மூன்று நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், கோரிக்கைள் பரிசீலிக்கப்படும் என்று நேற்று இரவு நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, உறுதியளித்ததை அடுத்து, மூன்று நாள் வேலை நிறுத்தத்தை ஒத்திவைப்பதாக ஒருங்கிணைந்த வங்கி ஊழயர் சங்கங்களின் கூட்டமைப்பு

அறிவித்துள்ளது. இதையடுத்து வங்கிகள் இன்று வழக்கம்போல் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

----------------

அதிக கட்டணம் வசூலிக்கும் ஆம்னி மற்றும் தனியார் பேருந்துகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏற்கெனவே பொதுமக்களிடம் பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

இனியும் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று திரு விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

----------------

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளாதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன், மாநிலத்தில் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

போதைப் பொருள் புழக்கமும் அதிகரித்துக் கொண்டே செல்வதாக அவர் தெரிவித்தார்.

டாஸ்மாக் மதுபானக் கடைகள் குறைக்கப்பட்டது தொடர்பாக மாநில அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தினார்.

----------------

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும் என சமூகநீதித் துறை அமைச்சர் வன்னிஅரசு கூறியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

----------------

முந்தைய திமுக அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளால் அக்கட்சியை மக்கள் ஆட்சியில் இருந்து அகற்றி இருப்பதாக தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை செயலாளரும் மாநில அமைச்சருமான திரு ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார்.

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம் தொகுதியில் நேற்று இரவு பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், சாதி, மத பாகுபாடு இன்றி மக்கள் தவெகவுக்கு வாக்களித்து இருப்பதாகவும் அதன் மூலம் தவெக வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்த வெற்றி, இடைத் தேர்தலிலும் தொடரும் என்று திரு ஆதவ் அர்ஜுனா நம்பிக்கை தெரிவித்தார்.

----------------

தேர்தல் வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்றத் தவறிவிட்டதாக திமுக இளைஞரணிச் செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

மதுராந்தகம் தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், மகளிர் உதவித் தொகை உயர்வு, 6 இலவச சமையல் எரிவாயு சிலிண்டர், வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகை, பயிர்க் கடன் தள்ளுபடி என எந்த வாக்குறுதியும், அறிவித்தபடி முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தார்.

இந்த தொகுதியின் இடைத் தேர்தல் தவெக-வால் திணிக்கப்பட்ட தேர்தல் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

---------------

தமிழகத்தில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவெக அரசு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

தாராபுரம் சட்டப் பேரவைத் தொகுதியில் நேற்று இரவு பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டதாகவும், கோவிட் பாதிப்புக் காலத்தில் கூட சிறந்த நிர்வாகம் உறுதி செய்யப்பட்டதாகவும் கூறினார்.

தற்போது தவெக ஆட்சியில் மின்வெட்டு அதிகரித்திருப்பதாகவும், மின்கட்டணமும் மறைமுகமாக உயர்ந்துள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

---------------

தமிழகத்தில் கொள்கை உறுதியுடன் செயல்படும் கட்சி நாம் தமிழர் மட்டுமே என்று அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு சீமான் கூறியுள்ளார்.

மதுராந்தகம் தொகுதியில் நேற்று இரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழ் மொழியையும் பண்பாட்டையும் காக்க நாம் தமிழர் கட்சி தொடர்ந்து செயலாற்றி வருவதாக தெரிவித்தார்.

மக்கள் பிரச்சினைகளுக்காகத் தமது கட்சி தொடர்ந்து குரல் கொடுத்து வருவதாக திரு சீமான் கூறினார்.

---------------

நாகப்பட்டினம் மாவட்டம் காமேஸ்வரம் கடற்கரையில், நடைபெற்ற நாகை காற்றாடி திருவிழா நேற்று மாலை நிறைவடைந்தது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று காற்றாடிகளைக் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

----------------

தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் திருப்பத்தூர், வேலூர், மதுரை, திருச்சி, சிவகங்கை உள்ளிட்ட 19 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் சில இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் சில இடங்களில் மாலை அல்லது

இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக் கூடும் எனவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் சில இடங்களில் அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட 2 முதல் 3 டிகரி செல்சியல் வரை அதிகரித்துக் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

---------------

செர்பியா அதிபர் திரு Aleksandar Vucic பதவிக் காலம் முடிவடைவதற்கு ஏழு மாதங்கள் முன்னதாக தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

---------------

இந்தியா சார்பில் ஆப்கானிஸ்தானுக்கு தொடர்ந்து வழங்கப்படும் மனிதாபிமான உதவிகளின் ஒரு பகுதியாக, காபூலில் உள்ள அரசு மருத்துவமனைக்கு உயிர் காக்கும் மருந்துகள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------------

நாடு முழுவதும் ரபி பருவ சாகுபடி தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த இரண்டு நாள் தேசிய மாநாட்டை, வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

----------------

65-வது தேசிய கலைக் கண்காட்சியையொட்டி, சிறந்த கலைப்படைப்புகளுக்கு 20 விருதுகளை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் லலித் கலா அகாடமி அறிவித்துள்ளது.

----------------

தமிழகத்தில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் மதுரையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

----------------

மதுரையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் பங்கேற்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு சீர்வரிசைகளை வழங்கினார்.

----------------

இராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் இதய விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மாவட்ட ஆட்சியர் திரு சிவகுரு பிரபாகரன் கொடியசைத்துத் தொடக்கி வைத்தார்.

----------------

உலக சுற்றுலா தினத்தையொட்டி, கன்னியாகுமரியில் சுற்றுலாத்துறை சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு.மு.பிரதாப் கலந்துகொண்டு, சுற்றுலா பயணிகளிடம் கலந்துரையாடினார்.

----------------

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு உதகமண்டலத்தில் நீலகிரி ஹோட்டம் மற்றும் உணவக சங்கம் சார்பில் உணவுத் திருவிழா நடைபெற்றது.

----------------

நீலக்கொடி மெரினா கடற்கரையில் சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று நடத்தப்பட்ட பாரம்பரிய கலைவிழாவை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு ரசித்தனர்.

----------------

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திருவனந்தபுரத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 295 ரன் எடுத்தது.

296 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 41 புள்ளி 4 ஓவரில் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 300 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

----------------

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பதக்கம் வென்ற இந்திய அணிக்கும், அதில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய தமிழகத்தைச் சேர்ந்த பிரக்ஞானந்தா, குகேஷ், வைஷாலி, சவிதா ஸ்ரீ ஆகியோருக்கும் முதலமைச்சர் திரு ஜோசப் விஜய் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

>>>>>>>>END<<<<<<<